முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் மாசி மாதம் 13 திகதி முதல்
சோபகிருது வருடம் மாசி மாதம் 20 திகதி வரை
(25.02.2024 ஞாயிறு முதல் 03.03.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானியாக நன்மை புரிந்திட
ஞாலமதில் அவதாரம் எடுத்து
கனிவேலவன் சக்தியாக அருளும்
கருணைமிகுந்த அரங்கமகா தேசிகனே
2. தேசிகனே உனைபோற்றி இனிதே
தெரிவிப்பேன் அரங்கன் நீகேட்க
ஆசிதந்து இந்தியா தமிழகத்தில்
அறிவிப்பேன் சோபகிருது சால்திங்கள்
3. திங்களிலே முன்னான்கோர் திகதி மேலாக
தக்க இருபான் திகதிவரை நடக்கும்
இங்கனமே வார நிகழ்வாக
எதிர்கால பலன் குறித்த ஆசிதனை
4. ஆசிதனை அகத்திய மகரிஷியும் உரைப்பேன்
ஆற்றல் மிக்க இந்து தர்ம
பேசிடுவேன் தெய்வ பலங்கள்
பேதமகற்றும் தரும பலங்கள்
5. பலங்களாக அகிலமே ஏற்க
பாரதப் பெருமை உலகறியும்
வளம்பெற தமிழர்களின் அறிவு
வல்லமைபட தேசம் தாண்டிச் செல்லும்
6. செல்லுமே செல்வாக்குப் பெருக
செப்பிடுவேன் தனிநபர் வளர்ச்சி
வல்லமைபட சமூக வளர்ச்சி
வருமுலகில் தேசவளர்ச்சி எனமாறும்

7. மாறுதலை செய்வேன் என
மக்களால் வந்த தலைமைகள்
ஆறுதலில்லா தன் கட்சியுடன்
அதிகாரிகள் துறைசார்புகள் என

8. என சுயநல செயல்பாடுகள்
எங்கும் செய்து நின்றால்
ஞானமிலா தவிப்பும் ஆக
நம்பகத்தன்மை மக்களிடை இழந்து

9. இழந்து பின்னடைவுகாண நேரும்
இனியும் மக்களை ஏமாற்றி
வளங்கள் பெற எண்ணினால்
வருங்காலம் ஆளுமைகட்கு கேள்விக்குறியாகும்

10. ஆகவே அரங்கமகான் காட்டும்
அறமோடு தருமஞானவழி ஏற்று
மிகைபட சேவை ஆற்றிட
முதன்மை கண்டு இந்தியா தமிழகம் உயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மாசி மாதம் 13ம் நாள் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 20ம் நாள் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்களுக்கு நன்மைகள் செய்திடவே ஞானியாக அவதரித்து முருகப்பெருமானின் சக்தி வடிவமாக கருணையை மக்களுக்கு அருளிக் காக்கின்ற தயவே வடிவான அரங்கமகாதேசிகனே உம்மை போற்றியே அரங்கா எதிர்காலம் குறித்து தாம் அகத்திய மகரிஷி என்னிடம் கேட்க அகத்திய மகரிஷி யானுமே அரங்கா உமக்கு ஆசிகளை அருளி இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் மாசி மாதம் 13ம் நாள் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 20ம் நாள் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஆற்றல் மிக்க இந்து மதத்தின் உண்மையான தர்மநெறிகளை, தெய்வீக சக்திகளை, மக்களிடையே உள்ள பேதாபேதங்களை போக்கும் தர்மசெயல்களை தர்மபலத்தை உலகம் ஏற்று கடைப்பிடித்தால் ஞானிகள் தேசமாம் இந்திய தேசத்தின் பெருமையை உலகறியும் ஞானிகள் தோன்றிய நாடாம் ஞானபண்டிதனின் நாடாம் தமிழகத்தின் பெருமையை தமிழர்களின் ஞான அறிவை தேசம் கடந்து உலகினில் வெளிப்படுமப்பா.

தர்மத்தின் அடிப்படையிலான தர்மநெறி உலகினில் பரவபரவ தனிநபர் வளர்ச்சி பெருகும். சமூக வளர்ச்சியும் பெருகி பெருகி அதுவே தேசத்தின் வளர்ச்சியாகவும் மாறுமப்பா.

உலகினில் தமது தேசத்தில் மாறுதலை செய்வேன் என மக்களுக்கு வாக்களித்து வந்த தலைமைகள் அவரவரும் சுயநலமாய் செயல்பட்டும் தர்மம் மறந்து நின்றால் அவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்து பின்னடைவைக் காண நேருமப்பா.

இனியும் மக்களை ஏமாற்றி பொருள் சேர்க்க நினைத்தால், சுகமாக வாழ எண்ணினால் வரும்காலம் அவர்களுக்கு கேள்விக்குறியாக மாறிடும் ஆதலினாலே தர்மத்தின் நெறியாம் ஜீவதயவே வடிவான சுத்த சன்மார்க்க நெறியை அரங்க மகான் காட்டும் உண்மை ஞான நெறியை தருமஞான வழியை ஏற்று மக்களுக்கு தொண்டுகள் செய்து தர்மங்கள் செய்து தர்மவழியிலே நடந்திட்டால் இந்த இந்திய தேசமும் தமிழகமும் மிகப் பெரும் நிலையினை அடைந்து சிறப்படையுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–